# யூன் – 25 – செவ்வாய்

## தூய வில்லியம்

**இடுக்கமான வாயில் வழியே செல்ல முயலுங்கள் ஏனெனில் அழிவுக்கு செல்லும் வாழ்வு அகன்றது. (மத்.7:13)**

---------------------------------------------------------------------

## முதல் வாசகம் : தொடக்க நூல் 13 : 2, 5 - 18

அந்நாட்களில் ஆபிராம் கால்நடைகளும் வெள்ளியும் தங்கமும் கொண்ட பெரிய செல்வராக இருந்தார்.ஆபிராமுடன் சென்ற லோத்துக்கும் ஆட்டு மந்தைகளும் மாட்டு மந்தைகளும் கூடாரங்களும் இருந்தன.அவர்கள் சேர்ந்து வாழ்வதற்கு இடம் போதவில்லை. அவர்களுக்கு மிகுதியான உடைமைகள் இருந்ததால், அவர்களால் சேர்ந்து வாழமுடியவில்லை. ஆபிராமின் கால்நடைகளை மேய்ப்போருக்கும் லோத்தின் கால்நடைகளை மேய்ப்போருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அப்பொழுது கானானியரும் பெரிசியரும் அந்நாட்டில் வாழ்ந்து வந்தனர்.ஆபிராம் லோத்தை நோக்கி, "எனக்கும் உனக்கும் என் ஆள்களுக்கும் உன் ஆள்களுக்கும் இடையே பூசல் ஏற்படவேண்டாம். ஏனெனில் நாம் உறவினர். நாடு முழுவதும் உன் கண்முன் இருக்கின்றது அல்லவா? என்னிடமிருந்து பிரிந்து செல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நீ இடப்பக்கம் சென்றால் நான் வலப்பக்கம் செல்வேன் நீ வலப்பக்கம் சென்றால் நான் இடப்பக்கம் செல்வேன்" என்றார்.லோத்து கண்களை உயர்த்தி எங்கும் நீர்வளம் சிறந்திருந்த யோர்தானின் சுற்றுப்பகுதியைக் கண்டார். சோகார் வரை அப்பகுதி ஆண்டவரது தோட்டம் போலும் எகிப்து நாட்டைப் போலும் இருந்தது. சோதோம், கொமோராவை ஆண்டவர் அழிப்பதற்கு முன் அது அவ்வாறிருந்தது. லோத்து யோர்தான் சுற்றுப்பகுதி முழுவதையும் தேர்ந்துகொண்டு கிழக்குப் பக்கமாகப் பயணமானார். இவ்வாறு ஒருவர் ஒருவரிடம் பிரிந்தனர்.ஆபிராம் கானான் நாட்டில் வாழ்ந்து வந்தார். லோத்து யோர்தான் சுற்றுப் பகுதியிலிருந்த நகரங்களில் வாழ்ந்துவந்தார். இறுதியில் சோதோமுக்கு அருகில் கூடாரம் அமைத்துக்கொண்டார்.

ஆனால் சோதோமின் மக்கள் ஆண்டவருக்கு எதிரான மிகக்கொடிய பாவிகளாக இருந்தனர்.லோத்து ஆபிராமிடமிருந்து பிரிந்தபின், ஆண்டவர் ஆபிராமை நோக்கி, "நீ இருக்கும் இடத்திலிருந்து உன் கண்களை உயர்த்தி வடக்கே, தெற்கே, கிழக்கே, மேற்கே பார்.ஏனெனில் நீ காணும் இந்த நாடு முழுவதையும் உனக்கும் உன் வழிமரபினருக்கும் என்றென்றும் கொடுக்கப்போகிறேன்.உன் வழிமரபினரைப் பூவுலகின் மண்ணைப் போலப் பெருகச்செய்வேன். ஆகவே பூவுலகின் மணலை ஒருவன் எண்ண முடியுமானால், உன் வழிமரபினரையும் எண்ணலாம்.நீ எழுந்து, இந்நாட்டின் நெடுகிலும், குறுக்கிலும் நடந்து பார். ஏனெனில் இதை நான் உனக்குக் கொடுக்கப் போகிறேன்" என்றார்.ஆகவே ஆபிராம் தம் கூடாரத்தைப் பிரித்துக் கொண்டு எபிரோனிலிருந்த மம்ரே என்ற கருவாலி மரத்தோப்பருகில் வந்து வாழ்ந்தார். அங்கே ஆண்டவருக்கு ஒரு பலிபீடம் எழுப்பினார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் கூடாரத்தில் தங்கிடத்
தகுதியுடையவர் யார்?

## நற்செய்தி : மத்தேயு 7 : 6, 12 - 14

அக்காலத்தில் இயேசு தம்சீடரை நோக்கிக் கூறியதாவது :தூய்மையானது எதையும் நாய்களுக்குக் கொடுக்க வேண்டாம். அவை திருப்பி உங்களைக் கடித்துக் குதறும். மேலும் உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் எறியவேண்டாம் எறிந்தால் அவை தங்கள் கால்களால் அவற்றை மிதித்துவிடும். ஆகையால் பிறர் உங்களுக்குச் செய்யவேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே.இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள் ஏனெனில் அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது. வழியும் விரிவானது. அதன் வழியே செல்வோர் பலர்.வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது. வழியும் மிகக் குறுகலானது. இதைக் கண்டுபிடிப்போர் சிலரே" என்றார்.

**தியானம்:** கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் நாம் அவரது அன்பைப் பெறுவோம் என்பதனை இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் எமக்கு தெளிவுபடுத்துகின்றன. கடவுளின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து வாழ்வது இடுக்கமான வாயில் வழியே செல்வது போன்றதுதான். நற்செய்தியில் கூறப்பட்டுள்ள "பிறர் உங்களுக்கு செய்ய வேண்டுமென்று விரும்புகிறவற்றை நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்" (மத்.7:12) என்ற இயேசுவின் வார்த்தை, ஆபிரகாமின் வாழ்க்கையில் செயல்வடிவம் பெறுவதை முதல் வாசகத்தில் நாம் காண்கிறோம். இதுவே எமது கிறிஸ்தவ வாழ்வின் பொன்விதி என அழைக்கப்படுகின்றது. எமது விசுவாசத்தை வாழ்ந்து காட்டுவதும். பிறர்மேல் கரிசனை கொண்டு வாழ்வதும் இலகுவானதல்ல. இடுக்கமான வாயிலிலே செல்லும் போதுதான் கடவுளின் அன்பைப் பெற்றுக்கொள்ள முடியும். வாழ்வுக்குச் செல்லும் வழியை எமது தெரிவுக்கே கடவுள் விட்டுவிட்டார். நமது தெரிவு இடுக்கமான வழியா? அகன்று செல்லும் வழியா? சிந்திப்போம், செயல்படுவோம்.